தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஹேவிளம்பி, ஆனி 30, திருவள்ளுவர் ஆண்டு–2048

2017 ஜூலை 14, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல."

விருப்பு, வெறுப்பு இல்லாத கடவுளின் திருப்பாதங்களை இடைவிடாமல் வணங்குகிறவர்களுக்கு எங்கும் எப்பொழுதும் துன்பம் இல்லை.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 201, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

201—

வன உயிரியல் பூங்கா

***828—திரு. த. மனோ தங்கராஜ் மற்றும்**
திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், உதயகிரிகோட்டையில் வன உயிரியல் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், உதயகிரிகோட்டையில் வன உயிரியல் பூங்கா அமைப்பது குறித்து கேட்ட கேள்விக்கு, பேரவையின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் கிராமத்தில் அமைந்துள்ள தொன்மைவாய்ந்த உதயகிரிகோட்டை சுற்றுலாத் தலத்தில் உயிரியல் பூங்கா அமைப்பதற்காக மத்திய உயிரியல் ஆணையம் மற்றும் உச்ச நீதிமன்ற ஆணை பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தினைக் கருத்திற்கொண்டு, தற்போதைய சூழ்நிலையில் ஒத்திவைக்கப்பட்டு, பின்னர் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்கள் வாயிலாகத்தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள். (குறுக்கீடு) திரு. த. மனோ தங்கராஜ், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்குளம் தாலுகாவில் அமைந்துள்ள உதயகிரிகோட்டை ஒரு வரலாற்று சிறப்புமிக்க பகுதியாகும். 1741 ஆம் ஆண்டு அது அமைக்கப்பட்டது. அப்போது அந்தப் பகுதியினுடைய உயரம் 260 அடியாகும்; அது 90 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. அதைச் சுற்றி அருமையான

கோட்டை அமைந்துள்ளது. அது Military Based *பகுதியாக இருந்தது. திருவாங்கூர் அரசர் மார்த்தாண்ட வர்மா கொச்சியோடு சேர்த்து ஆட்சி செய்தபோது, அவருடைய* Military Based *பகுதியாக உதயகிரிகோட்டை அமைந்திருந்தது. அன்று மார்த்தாண்ட வர்மாவுடைய படை, டச்சுப் படையைப் பிடித்து, அந்த மிலிட்டரியினுடைய தலைவரான* De Lennoy *என்ற ஐரோப்பியக்காரரைப் பிடித்து, அங்குள்ள சிறையிலே வைத்தது. அதனால் திருவாங்கூர் அரசர் மார்த்தாண்ட வர்மா, இவரையே மீண்டும் திருவாங்கூர் அரசினுடைய மிலிட்டரி அதிகாரியாக நியமித்தார். அப்படிப்பட்ட ஒரு சிறப்பு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஜே.ஜி. பிரின்ஸ், வரலாறு எல்லோருக்கும் தெரியும். நீங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *சிறப்புமிக்க பகுதி, 100 வகையான மரங்கள் நிறைந்த பகுதியாகும். அப்படிப்பட்ட சிறப்புமிக்க பகுதி, மரங்கள் வெட்டப்பட்டதால் இப்போது காடாகக் காணப்படுகிறது. நான் அந்தப் பகுதிக்குச் சென்று பார்த்தபோது, அங்கே 15 மான்கள்தான் இருந்தன. அவையும் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. அவற்றைப் பராமரிப்பதற்குத் தக்க நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதைத்தான் நான் கேட்கிறேன். ஏற்கெனவே இந்தப் பிரச்சினை பற்றி அவையில் நான் பேசியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. நீதிமன்ற வழக்கு இருந்தாலும்கூட, தாங்கள் தனித்துவமாக அந்தப் பணிகளைச் செய்து, அந்தப் பகுதியை மேம்படுத்திட முடியுமா, அதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, உதயகிரிகோட்டையின் சுவர் மற்றும்* De Lennoy *கல்லறைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படக் கூடாது என்றும், நினைவுச் சின்னங்களைப் பராமரிக்க கொண்டுசெல்லும் பொருட்கள் மற்றும் ஆட்களுக்கு தடையேதும் செய்யக் கூடாது என்றும், தொல்லியல் துறையினர் நிபந்தனைகளை விதித்துள்ளனர். உதயகிரிகோட்டையில் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக கோட்டையினைச் சுற்றிலும்*

உட்புறம் 20 அடி இடம் விடுதல் வேண்டுமென்றும், கோட்டையில் அமைந்துள்ள De Lennoy கல்லறைக்குச் செல்வதற்கு பார்வையாளர்கள் மற்றும் ஆய்வாளர்களை தொல்லியல் துறை பணியாளர்கள் அனுமதிக்க வேண்டுமென்றும் கடுமையான சட்டங்கள் மற்றும் நிபந்தனைகளை தொல்லியல் துறையினர் விதித்திருக்கிறார்கள். மேலும், மத்திய அரசாங்கமும், Central Zoo Authority of India–ம் அதற்கு கடுமையான கருத்துரைகளைக் கொடுத்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் ஆய்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உதயகிரிகோட்டையை ஆய்வு செய்து, வன உயிரியல் பூங்கா அமைப்பதற்கான சூழ்நிலைகள் ஏதுவாக இருந்தால், நிதிநிலைக்கேற்ப ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்களின் சென்ற ஆட்சிக் காலத்திலே, வன உயிரியல் பூங்கா அமைப்பதற்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறதே, சிறப்பாகப் பணியைச் செய்து முடித்து விடுவார்கள் என்று நான்கூட நினைத்தேன். ஏனெனில், அது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க பகுதி. அதை ஒரு பெரிய Tourist centre ஆக மாற்ற முடியும், Museum ஆக மாற்ற முடியும், ஆனால், உயிரியல் பூங்கா அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். இதை மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அங்கு ஓர் உயிரியல் பூங்கா அமைத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறப்புமிக்க இடமாக அதை மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் 15-5-2012-ல் தமிழ்நாடு

2017 ஜூலை 14]

முதலமைச்சராக இருந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விதி 110-ன்கீழ் அதற்கான நிதியை ஒதுக்கியது உண்மைதான். ஆனால் மத்திய அரசாங்கத்தினுடைய கடுமையான சட்டங்களும், இது குறித்த கருத்துகள் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றதனாலும், உச்ச நீதிமன்றம் அதற்கு எந்தவித அனுமதியும் கொடுக்காத காரணத்தினாலும் அந்த ஆய்வுகள் தொடர்ந்து இன்னமும் நடைபெற்று வருகின்றன. 22 ஏக்கர் பரப்பளவில் வன உயிரியல் பூங்காவை, புள்ளி மான், கடமான், வெளிமான், நீலகிரி கருமந்தி, இந்திய எறும்புத்திண்ணி போன்ற 26 வகையான வன உயிரினங்களுடன் அமைக்கத் திட்டமிட்டுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110–ன்கீழ் அறிவித்து, சிறப்படையச் செய்வதற்கு உத்தரவிட்டிருந்தார்கள். ஆனால், உச்ச நீதிமன்றத்தில் அனுமதி கிடைக்கவில்லை என்பதும் வழக்கறிஞராகிய உங்களுக்கே தெரியும். எனினும், அந்தக் கருத்துருவை மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடியார் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, உச்ச நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று, அம்மா அவர்களால் விதி 110–ன் கீழ் அறிவிக்கப்பட்ட அந்த நிதியை இதற்குப் பயன்படுத்துவதற்குரிய சூழ்நிலையை இந்த அரசு மேற்கொள்ளும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி, நிதி ஆதாரங்களைப் பொறுத்து ஆவன செய்யப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாதவரம் தொகுதிக்குட்பட்ட, சோழவரம் ஒன்றியம், பழைய எருமைவெட்டிப்பாளையம், புதிய எருமைவெட்டிப்பாளையம் ஊராட்சிகளுக்கு காப்புக் காடுகள் வழியாக சுமார் 3 கி.மீ. சாலை சென்று கொண்டிருக்கிறது. கடந்த 6 ஆண்டுக் காலமாக அந்தச் சாலை புதுப்பிக்கப்படாமல் வனத் துறையினரின் ஆட்சேபனையால் அப்படியே கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்,* RDO *ஆகியோரிடம் பலமுறை மனு கொடுத்தும் இதற்குத் தீர்வு காணப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு உடனடியாகத் தீர்வு காண்பாரா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உயிரியல் பூங்கா அமைப்பது பற்றிய மூல வினாவிற்கு சம்பந்தமின்றி வனச் சாலை பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அந்தக் கருத்துருவை எங்களுக்குத் தெரிவித்தால், வன அதிகாரிகள் மூலமாக பரிசீலனை செய்து, நிதிநிலைக்கேற்ப ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 202, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான், மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

202—

பெண்கள் மேல்நிலைப் பள்ளி

***9912—திரு. கே.எஸ். மஸ்தான்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *செஞ்சி தொகுதி, அனந்தபுரத்தில் உள்ள மேல்நிலைப் பள்ளியைப் பிரித்து பெண்களுக்கென தனியாக மேல்நிலைப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *மேல்நிலைப் பள்ளியை நேரடியாக பெண்கள் மேல்நிலைப் பள்ளியாகப் பிரித்து தரம் உயர்த்த இயலாது. ஏற்கெனவே செயல்பட்டுவரும் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளை மட்டுமே பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*